www.tamilarangam.net

# விடுதலை ஸ்தாபனங்களே!
# கூட்டுறவை வளர்ப்பதற்கு பதில் சீரழிப்பதா?

## நிரபராதிகள் வெளியேற்றம்!
## குற்றவாளிகளிற்கு பாதுகாப்பா?

## மோசடி புரிந்த பொதுமுகாமையாளரை பாதுகாக்கவா PLOT இராணுவம்?

பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்ட நல்லூர் ப. நோ. கூ. சங்க இயக்குனர்சபை 19-8-85 கூட்டாக இராஜினாமா!

## PLOT இராணுவம் பின்னணியில்!

தனிநபரின் தவறான தகவல்களை வைத்து எவ்வித விசாரணையும் இல்லாமல் குற்றங்கள் நிரூபிக்கப்படாமல் சோடிக்கப்பட்ட குற்றச் சாட்டுகளை வைத்து 3 தினங்களிற்குள் பதவியிலிருந்து விலகும்படி நிர்ப்பந்திக்கப்பட்டதன் காரணமாக இயக்குனர் சபை கூட்டாக இராஜினாமா செய்துள்ளார்கள்.

இச் சம்பவம் ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்த அனைவரிற்குமே பேரதிர்ச்சியைத் தந்துள்ளது. ஜனநாயக மரபுக்கிணங்க பொதுச்சபை உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்ட இயக்குனர் சபையை குற்றங்கள் நிரூபிக்கப்படாமல் அவர்களின் விளக்கத்திற்கு கால அவகாசம் கொடுக்கப்படாமல் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி மக்களின் அனுமதியின்றி எவ்வாறு இவர்களை நீக்க முடியும்? இவர்கள் செய்த குற்றம் தான் என்ன? பல மோசடிகளோடு சம்பந்தப்பட்ட சங்கத்திற்கும் பல இலட்சம் ரூபா நட்டத்தை ஏற்படுத்தி சங்கத்தின் நற்பெயரை களங்கப்படுத்திய முன்னாள் நுகர்ச்சி முகாமையாளரை பதவி நீக்கம் செய்தது குற்றமா? இவரிற்கு பதவி வழங்கச் சொல்லி கேட்பதுதான் நியாயமா? அப்படியென்றால் மோசடிகளிற்கு தாங்களும் உடந்தையா? பல குற்றச் சாட்டுகளோடும் சம்பந்தப்பட்ட பொது முகாமையாளர் மீது விசாரணை மேற்கொண்டது குற்றமா?

இயக்குனர் சபையின் குற்றங்களை மக்கள் முன் அல்லது பணியாளர்முன் அம்பலப்படுத்தாமல் தீர்ப்பு வழங்கியதன் மர்மமென்ன?

இயக்குனர் சபையின் குற்றங்களை பணியாளர் முன் கூற மறுத்ததேன்?

அன்று கொள்ளையரை முறியடிப்போம் என்றவர்கள் இன்று கொள்ளையருக்கே அடைக்கலம் கொடுப்பதேன்?

குற்றவாளிகள் யாரென்பதை தங்களுக்குத் தெரியாதா?

குற்றவாளிகள் தற்போதுள்ள பொது முகாமையாளர் அவர்களும் முன்னாள் நுகர்ச்சி முகாமையாளரும் கூட்டாகவும், தனித்தும் நடாத்திய மோசடிகளிற் சில.

1. 18-9-81 மா விற்பனையின் மோசடியால் ரூபா 56,637 சதம் 50 நட்டம்
2. 12-10-81, 10-9-81 இல் 400 பக்கற் சீமெந்து விற்பனையில் மோசடி
3. 21-1-82, 22-2-82 இல் சீனி விற்பனையில் மோசடி
4. அனுமதியின்றி 56102 ரூபா 10 சதம் S. V. முருகேசுவிற்கு கடன் விற்பனை
5. வங்கிக்கு காரோடிய பத்திரத்தில் கள்ள கையொப்பத்தை சிபாரிசு செய்து காசு கொடுத்து மோசடி செய்தமை
6. 1-7-82 இல் கொழும்பில் சீமெந்து விற்பனை செய்து மோசடி
7. 26-1-82, 27-1-82, 29-1-82 ஆகிய தினங்களில் 13 லோட் சீனி S. V. முருகேசுவிற்கு விற்ற வகையில் 72,325/- மோசடி
8. ஏல விற்பனையின்றி மோட்டர் விற்பனை
9. 17-1-83 இல் சீனி குறைவும் 19-1-83 இல் சீனி கூடுதலும்
10. 21-2-83 இல் கூடிய விலைக்கு வாங்கிய மாவை குறைந்த விலைக்கு தனியார் விற்பனை நிலையங்களிற்கு விற்று 8569 ரூபா 50 சதம் நட்டம் ஏற்படுத்தியது
11. சர்வகலாசாலை தண்ணீர் வழங்குதலின் போது பல்லாயிரம் ரூபா மோசடி
12. டயர் கொள்வனவு மோசடி

மேற்படி குற்றச்சாட்டுகளிற்கு ஆதாரம் எண்பார்வை அறிக்கைகளும் சங்க பதிவேடுகளும்.

10-9-85 கூட்டுறவாளர்கள்

தமிழீழத்தில் வெளியிடப்பட்டது.

Tamils For A Democratic Eelam,
B.M Box 4338,
London WC1N 3XX.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்